முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1633

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.03.2024,** செவ்வாய்க்கிழமை

1. பார்காக்க வந்த பரம ஆனந்த ஞானகுருவே
பரோபகாரம் விதைத்து உலகோர்க்கு எல்லாம்
கர்மவினை போக்கி காத்தருள
கலியினில் எந்தன் அவதாரமாக வந்த ஞானதேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞானஅறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 06 ம் நாள், 19.03.2024, செவ்வாய்க்கிழமை)
ஆசிதந்து உன்கரத்தில் யான் இருந்தே
அகிலத்தார்க்கு ஆற்றல் கூட்டி அற்புதம் நடத்துகின்றேன்
3. நடத்தவே அரங்கன் உன்புகழ் உலகறிய வேண்டி
ஞானமாக ஆறுமுகப்பெருமான்யான்
யானுமே உலகமெல்லாம் பிரணவக்குடில் சக்தியாக
உய்வுகொண்டு கலியுகத்தின் இடரையே வெல்ல
4. தயவாக தர்மமாக தக்க
தவசக்தியாக தொண்டர்கள் மூலம் இறங்கி
இறங்கியே அரங்கன் உமக்கு ஆறுமுகன்யான்
இணையிலா புகழ் சேர்த்து வருகின்றேன்
5. வருகவே அரங்கன் நாமம் சொல்லுகின்ற இடமெல்லாம்
வல்லமைபட வடிவேலன்யான் இறங்கி அல்லல் போக்கி
அனைத்து பாதுகாப்பும் கூட்டி
ஆக்கமுடன் தர்மம் வளர்த்து காத்து அருள்புரிகின்றேன்
6. அருளவே அரங்கன் உன்னை கொண்டே
அகிலத்தில் பெருமாற்றம் நிகழ்த்த உள்ளேன்
ஆற்றல்பட அரங்கனுக்கு எழுந்து
அமர்ந்து நடக்கும் மகாசக்தி பலமும்

7. சூட்சுமம்பட ஆறுமுகன் வருங்காலங்களில் அருளி
சுருதிபடி உலகோர்க்கு பிரமிப்பை உருவாக்குவேன்
ஆக்கமுடன் வானவர்கள் வியக்க அற்புதம்பட இந்த மாற்றத்தை
ஆறுமுகன் யான் நடத்துவேன்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–